
₹100/-

3 - 4

# ஞானகுரு மகிழ்ச்சி

ஏப்ரல் 2024

எஸ்.கே.முருகன்



## ஜக்கி வாசுதேவ்

## கடவுளை ஏன் நம்புவதில்லை..?!




www.gyaanaguru.com



ஆசிரியர் பக்கம்

# ரஜினியாக அல்ல, ஜிம் கேரி போன்று பேசுவோம்..!

பணம், செல்வாக்கு இருந்தால் மட்டும் நிம்மதி கிடைத்துவிடாது என்ற தத்துவத்தை சொல்வதற்கு ஆசைப்பட்ட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், ‘பணம், புகழ், பெயர் எல்லாம் பார்த்துட்டேன். ஆனா நிம்மதி 10 பர்சன்ட் கூட இல்லை’ என்று பேசினார்.

இதை கேட்ட அனைவரும், ‘ரஜினிக்கு நிம்மதி இல்லை’ என்று புரிந்துகொண்டார்கள்.

இதே விஷயத்தை பிரபல ஹாலிவுட் நடிகர் ஜிம் கேரி, ‘என் ஆசை என்னன்னா உலகத்துல இருக்குற எல்லாரும் பணமும், புகழும் இருக்குறவங்களா மாறணும். அந்த பணம், புகழ வச்சு அவங்க செய்ய நினைச்சது எல்லாத்தையும் செய்யணும். அதுக்கப்புறம் தான் அவங்களுக்குத் தெரிய வரும் பணம், புகழ் மட்டும் வாழ்க்கைக்கான பதில் இல்லை’ என்று சொன்னார்.

இதை கேட்டவர்கள், பணம், புகழ் நிறைய இருப்பவர்களுக்கு அதையும் தாண்டி நிறைய பிரச்னைகள் இருக்கும் என்று தெளிவாகப் புரிந்துகொண்டார்கள்.

தத்துவம் மட்டுமல்ல, சாதாரண தகவல்களையும் பிறருக்குத் தெளிவாகப் புரியும் வகையில் பேசுவது மிகவும் முக்கியம். ஏனென்றால், பேசுபவரும் கேட்பவரும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. ஆகவே புரிதல் குளறுபடியால் குழப்பம் வருகின்றன.

இன்று மாலை ஷோவுக்கு டிக்கெட் எடுத்துவிட்டேன்… சினிமாவுக்குப் போகலாம் என்று கணவர் காலையில் கூறிவிட்டு அலுவலகம் போயிருப்பார். மாலையில் போன் செய்யும் மனைவி, “நாங்க எல்லோரும் கிளம்பிட்டோம்… நீங்க சீக்கிரம் வந்திடுங்க…” என்று போனை வைக்கிறார்.

இதனை குடும்பத்தினர் கிளம்பி தியேட்டருக்குப் போகிறார்கள் என்றும், தன்னை வீட்டுக்கு சீக்கிரம் வரச் சொல்கிறார் என்றும் இரண்டு விதத்தில் கணவர் புரிந்து கொள்ளலாம். மனைவிக்கு போன் செய்து தெளிவாகக் கேட்காமல் கணவரே ஒரு முடிவு எடுக்கும்போது, அது குழப்பத்தில் முடிந்து, சண்டை நடக்கிறது.



இப்படி பல்வேறு சம்பவங்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் தினமும் நடக்கிறது. எனவே, எந்த ஒரு விஷயத்தையும் பிறருக்குப் புரியும் வகையில் தெளிவாகப் பேசுவோம். அதையும் மீறி தவறு நிகழும்போது, ‘நான் சரியாகச் சொன்னேன்… நீ புரிந்துகொள்ளவில்லை’ என்றெல்லாம் குற்றம் சாட்டாமல் நமது தவறு என்றே ஒப்புக்கொள்வோம்.

இந்த தெளிவே குடும்பத்திற்கு மகிழ்ச்சி தரும்.

**ஆசிரியர்**

www.gyaanaguru.com

# பல்லியை விட மனிதன் சிறப்பான படைப்பா..?

“இந்த பிரபஞ்சத்தில் உள்ள உயிர்களில் மனிதனே மிகவும் வசதியாக வாழ்கிறான். சிறப்பாக சிந்திக்கிறான். மனிதனைபோன்ற சிறப்பான படைப்பு என்று எந்த உயிரினத்தையாவது சொல்ல முடியுமா?” ஞானகுருவிடம் ஆர்வமாகக் கேட்டார் மகேந்திரன்.

”எல்லா உயிர்களும் ஒரே ஒரு லட்சியத்துடனே வாழ்கின்றன. அது, தப்பிப் பிழைத்தல். அதாவது எப்படியும் உயிர் வாழ்தல் என்ற போராட்டம் மட்டுமே ஒவ்வொரு உயிரின் அணுக்களிலும் கலந்திருக்கிறது. இந்த போராட்டம் எல்லா உயிரினத்துக்கும் பொருந்தும். எல்லா உயிரினங்களும் தங்களால் முடிந்த வரையிலும் உயிர் வாழ்தலுக்காக மிகப்பெரும் போராட்டம் நடத்தியே உயிர் வாழ்கின்றன…. எனவே, மனிதன் மற்ற உயிர்களை விட நிச்சயம் உயர்வானவன் இல்லை, ஆனால், நிச்சயம் தாழ்வானவன்…”

“நீங்கள் சொல்வது புரியவில்லையே..?”

”காட்டில் புலியும் மானும் ஒரே இடத்தில் வசிக்கின்றன. ஒரு மானை புலி துரத்துகிறது என்றால், நிச்சயம் அதனை பிடித்து கொன்றுவிடும் என்று அர்த்தம் அல்ல. புலிக்கு அந்த மான் இரைவாவதற்கு 50 சதவிகிதம் வாய்ப்பு இருப்பது போலவே, அந்த மானுக்கு தப்பிப் பிழைப்பதற்கும் 50 சதவிகிதம் வாய்ப்பு இருக்கிறது, அப்படி தப்பவும் செய்கின்றன. அதனாலே எத்தனை புலிகள் இருந்தாலும் அந்த காட்டில் மான்களும் வாழ்கின்றன. மான்கள் இனம் முற்றிலும் அழிய வேண்டும் என்று புலிகள் விரும்புவதில்லை.

இதன் அர்த்தம் என்னவென்றால் ஒவ்வொரு உயிரினத்திற்கும் உயிர் வாழும் தகுதியும் திறமையும் இருக்கிறது என்பது தான். அதனாலே அத்தனை உயிரினங்களும் இத்தனை காலமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றன… பிற மிருகங்கள் வாழவும் அனுமதிக்கின்றன. தேவையில்லாமல் ஒரே நேரத்தில் பத்து மான்களை புலிகள் கொல்வதில்லை… ”



www.gyaanaguru.com
www.gyaanaguru.com



# ஒளிச்சிதறல்

சிரிப்பை விட அற்புத மருந்து வேறெதுவும் இல்லை. துன்பம் நேர்கையில் ருசித்துப் பாருங்கள்.

“டயனோசரஸ் போன்ற மிருகங்கள் அழிந்துவிட்டனவே, மனிதனின் வேட்டையினால் எத்தனையோ உயிர்கள் அருகிப் போனதே...”

‘‘இயற்கை மாற்றத்தால் உயிர்களுக்கு ஒட்டுமொத்த அழிவு நிகழ்வதற்கு வாய்ப்பு இருக்கவே செய்கிறது. அப்படித்தான் டயனோசரஸ் போன்ற விலங்குகள் அழிந்திருக்க முடியும். திடீரென பூமியிலுள்ள நீரின் வேதியல் தன்மை மாறினால், காற்றில் விஷத்தன்மை பரவினால், மிகப்பெரும் பூகம்பம் உருவானால் மனிதனும் அழிந்துபோகலாம். மனிதன் ஆதாயத்துக்காக எத்தனையோ உயிர்களை முழுமையாக கொன்று தீர்க்க நினைக்கிறான். அதனாலே மனிதனை மற்ற உயிர்களை விட மேலானவன் இல்லை என்கிறேன்...”

‘‘ஆனால், உணவுக்காக ஒன்றையொன்று கொல்வது தவறு இல்லை என்றுதானே சொல்கிறீர்கள், பிறகு எப்படி மனிதன் செய்வது தவறாக இருக்கும்..?”

”கொசு, ஈக்கள், பூச்சுகள், பல்லிகள் போன்றவை ஒன்றையொன்று தின்று வாழ்கின்றன. ஆனால் பல்லி, கரப்பான், பாம்பு, கொசு போன்ற உயிரினங்களுக்கு தங்கள் இடத்தில் வாழ்வதற்கு உரிமை இல்லை என்று மனிதன் நினைக்கிறான். அவற்றை விரட்டுவதற்கு எத்தனையோ வழிகளைக் கையாள்கிறான். இவற்றைக் கொல்வதற்கு மனிதகுலம் காலகாலமாக போராடி வருகிறது. ஆனாலும், கரப்பான் இல்லாத வீட்டைக் காண முடியுமா..? தப்பிப் பிழைக்கும் போராட்டத்தில் மற்ற உயிரினங்கள் மனிதனை விட சிறப்பாகவே மேம்பட்டுள்ளன...”

’’ஆனால், மனிதனைப் போன்று பல்லிகள், விலங்குகள், பறவைகள் வீடு கட்டுவதில்லை, மின்சாரம் பயன்படுத்துவதில்லை, வாகனங்கள் உபயோகிப்பதில்லை. இத்தனை சொகுசான வாழ்க்கை மற்ற உயிரினங்களுக்கு இல்லை தானே..?”

‘‘மனித வாழ்க்கை சொகுசாக மாறிவிட்டது என்று சொல்லும் அதே மனிதனே வாழ்க்கை மிகவும் கொடுமையாக இருக்கிறது என்றும் சொல்கிறான். தனிமையில் இருப்பதற்கு மனிதர்கள் பயப்படுகிறார்கள். வேலை போய்விடுமோ என்று பயப்படுகிறார்கள், தோற்றுவிடுவோம் என்று அஞ்சுகிறார்கள். சேமிப்பு கொள்ளை போய்விடுமோ என்று சந்தேகப்படுகிறார்கள். நோயில் மாட்டிக்கொள்வோம் என்றும் பிறர் தம்மை அவமானம் செய்கிறார்கள் என்றும் வருந்துகிறார்கள். இப்படிப்பட்ட கவலைகள் எல்லாம் மற்ற உயிரினங்களுக்கு இல்லை.

ஒரு குரங்குக்கு வாழைப்பழம் தருவதாக நீட்டி.. அதை ஏமாற்றிவிடலாம். அதற்காக அது கோபம் கொள்ளாது, பழி வாங்காது. ஆனால், மனிதனை ஏமாற்றினால் கொலை நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

அந்த வகையில் பகுத்தறிவு இல்லாத வாழ்வு சுகம். கறிக்கடையில் ஒரு ஆட்டை உரித்து தொங்கப் போட்டு அதை வெட்டி விற்பனை செய்துகொண்டு இருப்பார்கள். அடுத்து வெட்டுவதற்காக காத்திருக்கும் ஆட்டுக்கு ஒரு அகத்திக்கீரை கட்டு கொடுத்துப் பாருங்கள், அதை மகிழ்ச்சியுடன் சாப்பிடுமே தவிர, அடுத்து சாகப் போகும் அச்சத்தில் நடுங்கிக்கொண்டு இருக்காது.

இந்த நிமிடத்தில் வாழ்வதை மற்ற உயிரினங்கள் தங்கள் வாழ்க்கைக் கலையாக வைத்திருக்கின்றன. அதனால் தான் நிறைய தானியங்கள் கிடைக்கும் போது பறவைகள் எடுத்து பதுக்கி வைத்துக்கொள்வதில்லை. ஆனால், செல்வத்தையும் உணவையும் பதுக்கிவைப்பவர்களை கோடீஸ்வரர்கள் என்று கொண்டாடுகிறார்கள்...”

”அப்படியென்றால் மனிதராகப் பெருமைப்பட எதுவும் இல்லை என்கிறீர்களா..?”

‘‘ஆம், மனித இனம் உருவான காலத்தில் இருந்து வசதிகள், வாய்ப்புகள் மாறியிருந்தாலும் மனிதன் மனதில் இருந்த அச்சம், கோபம், குழப்பம் போன்றவை குறையவே இல்லை. இந்த நிமிடத்தில் வாழும் கலையைக் கற்கும் வரை மனிதருக்கு மகிழ்ச்சி கிடைக்கப்போவதில்லை..” என்றார் ஞானகுரு.





# கவித்துவம்



இத்தனை அழகாக
கண்களில்
ஒற்றிக்கொள்ளும்படி
விழும்
அந்திமழைக்கு
ஒரு குறையும் இல்லை
கொஞ்சிக் கிள்ளிட
ஒரு கன்னம்
இல்லையென்பதைத் தவிர.

– ந.சிவநேசன்



# பத்து 10 பத்து

அவசரமான பணத் தேவையில் இருக்கிறீர்கள். பணம் கிடைக்கவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் பெரும் துன்பம் அடைய நேரிடும் இக்கட்டான சூழலில் இருக்கிறீர்கள். மனைவி, பிள்ளைகள் வெளியே போயிருக்கும் நேரத்தில் கதவு தட்டப்படுகிறது. கதவைத் திறக்கிறீர்கள்.

எதிரே ஒருவர் கையில் சூட்கேஸ் வைத்துக் கொண்டு நிற்கிறார். அவர் முகத்தை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது, ஆனால் யாரென்று அடையாளம் தெரியவில்லை. அந்த நபர் உங்கள் அறை வாசலில் நின்று ரகசியக் குரலில் பேசுகிறார்.

“இன்று இரவு மட்டும் நான் இங்கே தங்கிக்கொள்ள அனுமதி கொடுங்கள். இதற்கு பிரதிபலனாக ஐந்து லட்சம் ரூபாய் கொடுக்கிறேன். காலையில் எழுந்ததும் என்னைக் கூப்பிட ஆட்கள் வருவார்கள். அவர்களுடன் போய்விடுவேன். உங்களுக்கு எந்தத் தொந்தரவும் தரமாட்டேன்” என்கிறார்.

“ஏன் உங்களிடம் பணம் இருக்கிறதே... பக்கத்தில் இருக்கும் ஹோட்டலில் ரூம் புக் செய்துகொள்ளுங்கள்” என்கிறீர்கள்.


‘‘பணம் எனக்கு பிரச்னை இல்லை. ஆனால் என்னை போலீஸ் தேடுகிறது. அதனால்தான் ஆளரவம் இல்லாத பகுதியில் இருக்கும் உங்கள் வீட்டைத் தேடி வந்திருக்கிறேன்” என்கிறார். அப்போது தான் அந்த நபர் வங்கிக் கொள்ளையில் போலீஸாராம் தேடப்படும் நபர் என்பது தெரியவருகிறது.

என்ன முடிவு எடுப்பீர்கள்?

யாருக்குத் தெரியப்போகிறது என நினைத்து வீட்டுக்குள் சேர்ப்பீர்களா அல்லது ‘ஸாரி, மன்னித்துக் கொள்ளுங்கள்’ என்று அவரை திருப்பி அனுப்புவீர்களா?

இதுபோன்ற குழப்பம் ஏற்படும் தருணங் களில் 10 - 10 - 10 என்ற மந்திரத்தைப் பயன் படுத்துங்கள், உங்களுக்குத் தெளிவான பதில் கிடைக்கும் என்கிறார் சூஸி.

இவர் யார் என்று பார்க்கும் முன்னர், இந்த 10 - 10 - 10 மந்திரத்தின் மகிமையைப் பார்க்கலாம். இன்று, நாளை மற்றும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று சிந்திப்பதையே சூஸி இப்படி சொல்கிறார்.




www.gyanaguru.com



முதல் 10 என்பது அடுத்த 10 நிமிடங்கள்.

இரண்டாவது 10 என்பது அடுத்த 10 மணி நேரம் அல்லது அடுத்த 10 நாட்கள்.

மூன்றாவது 10 என்பது அடுத்த 10 வருடங்கள்.

வங்கிக் கொள்ளையில் தொடர்பு உள்ள ஒரு நபரை வீட்டுக்குள் சேர்த்தால் அடுத்த 10 நிமிடங்களில் என்ன நிகழும்? எதுவும் நிகழாது. ஒருவேளை உங்கள் கவலையான 4 லட்சம் ரூபாய் பிரச்னை தீர்ந்துபோகலாம். அதனால் உங்களுக்கு சந்தோஷம் கிடைக்கலாம் என்பதால் ‘இன்று’ என்பதைப் பொறுத்தவரை அது சரியான முடிவு.

‘நாளை’ அதாவது அடுத்த 10 மணி நேரத்தில் அல்லது 10 நாட்களில் என்ன நிகழும்?

உங்கள் மனைவி, குழந்தைகள் வீட்டுக்குத் திரும்பிவருவார்கள். ஒரு கிரிமினல் வீட்டுக்குள் இருப்பதைக் கண்டு அதிரலாம். அதனால் உங்கள் குடும்ப உறவு முறிந்து போகலாம். ஒரு வேளை அந்தக் கொள்ளையனைத் தேடி போலீஸ் ஒவ்வொரு வீடாகத் தேடி வரலாம். அப்படி ஒரு சூழல் நேர்ந்தால் அவருக்கு அடைக்கலம் கொடுத்த காரணத்துக்காக உங்களை கைது செய்யலாம். உங்கள் செயலால் குடும்பமே அவமானப்படலாம். பணத்தால் கிடைக்கும் சந்தோஷத்தைவிட, துன்பமே அதிகமாக இருக்கும்.

அடுத்த 10 வருடங்களில் என்ன நிகழும்?

கைது செய்யப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு நீங்கள் சிறையில் வாடலாம். ஒரு வேளை சிறையில் இருந்து விடுதலை பெற்றிருந்தால் கூட, எங்கு கொள்ளை சம்பவம் நிகழ்ந்தாலும் அந்த நபர்களுக்கும் உங்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்று போலீஸ் உங்களை சந்தேக லிஸ்டில் வைத்திருக்கலாம். அதேபோன்று அந்தக் கொள்ளையனின் கூட்டாளிகளும் அவசரத்துக்கு உங்களைத் தேடி வரும் பழக்கம் கொண்டிருக்கலாம். உங்கள் தவறான முடிவு காரணமாக உங்கள் மனைவி, மகன் இருவரும் உங்களிடம் இருந்து பிரிந்து தனியே வாழலாம். பணத்துக்கு ஆசைப்பட்ட உங்களைக் கண்டாலே அவர்கள் வெறுக்கலாம். ஆக, எதிர்காலத்தில் இன்பத்தைவிட துன்பமே அதிகம் இருக்கிறது.

இப்போது மூன்று பத்துக்களிலும் என்னவெல்லாம் நிகழ வாய்ப்பிருக்கிறது என்பதை யோசித்து அறிந்தாகிவிட்டது. நன்மையைவிட தீமையே அதிகமாக இருப்பதால், நிச்சயம் அந்தக் கொள்ளையனுக்கு இடம் கொடுக்க மாட்டீர்கள். கொள்ளையன் தங்குவதற்கு ஒரு நாள் இடம் கொடுத்துவிட்டு, வாழ்நாள் முழுவதும் உங்கள் நிம்மதி தொலைவதற்கு விரும்ப மாட்டீர்கள். இதுவே 10 - 10 - 10 மந்திரத்தின் மகிமை.

வாழ்வின் இக்கட்டான தருணங்களில் மட்டுமின்றி வியாபாரத்தில், மனித மேலாண்மையில், காதலில், குழந்தை வளர்ப்பில், தொழிற்சாலையில், பள்ளியில் என்று எங்கெங்கு முடிவெடுப்பதில் குழப்பம் நேர்ந்தாலும், இதனை பயன்படுத்த முடியும் என்பதுதான் இதன் சிறப்பு.

இந்த வெற்றி மந்திரத்தை அறிமுகப்படுத்தி இருக்கும் சூஸியின் வாழ்க்கையும் ருசிகரமானது. அவர் இன்றும் பிரபல எழுத்தாளராக வாழ்ந்து வருகிறார்.

அமெரிக்காவில் 1959ம் ஆண்டு பிறந்தார் சூஸன்னா ஸ்பிரிங். நிர்வாகம், மேலாண்மை ஆகியவற்றில் ஆர்வமாக இருந்த காரணத்தால் ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூலில் படித்து பட்டம் பெற்றார். பல்வேறு நிறுவனங்களில் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். பின்னர் ஒரு பத்திரிகையாளராக ஹார்வர்டு பிசினஸ் பத்திரிகையில் சேர்ந்து, பொறுப்பாசிரியராக பதவி உயர்வு பெற்றார். இந்த காலகட்டத்தில் அவருக்குத் திருமணமாகி நான்கு குழந்தைகள் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் சூஸி வாழ்வில் புயல் வீசியது. கணவர் சூஸியை கைவிட்டுச் சென்றுவிட்டதால், தனியாக நின்று குழந்தைகளை வளர்க்கவேண்டிய பொறுப்புக்கு ஆளானார்.

சூஸியின் வாழ்க்கை கடினமாக இருக்கையில், ஒரு பேட்டிக்காக ஜேக் வெல்ச் என்ற கோடீஸ்வர நிர்வாகியை சந்தித்தார். இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகம் இருந்தாலும், காதல் பற்றிக்கொண்டது. அதனால் இருவரும் திருமணம் செய்துகொண்டனர். அதன்பிறகு இருவரும் சேர்ந்து நிர்வாகம், மேலாண்மை, மனிதவள தொடர்பு போன்றவற்றில் அக்கறை காட்டினார்கள். தொடர்ந்து நிறைய கட்டுரைகளும், புத்தகங்களும் எழுதத் தொடங்கினார் சூஸி. இந்தக் காலத்தில்தான் மாபெரும் விற்பனை சாதனை படைத்த 10 - 10 - 10 என்ற நிர்வாகப் புத்தகத்தை எழுதினார். இன்று உலகிலேயே மிக அதிகம் விற்பனையான மேலாண்மை புத்தகமாகப் போற்றப்படுகிறது.

சூஸியின் வெற்றி மந்திரத்தின் தனித்தன்மை என்னவென்றால் இதன் எளிமைதான். பொதுவாகவே வணிகம் மற்றும் மனிதவள மேலாண்மையில் முடிவுகள் எடுப்பது குறித்த உபாயங்களை மிகவும் ரகசியமாகவும் பல்வேறு கட்டங்களாகவும் சொல்லித் தருவார்கள். ஆனால் மிகவும் சிம்பிளாக வெற்றி ரகசியத்தை சொல்லி இருக்கிறார் சூஸி.

## மந்திரச்சொல்

யாரேக்கேனும்
மிகப்பெரிய
உதவி செய்ய
ஆசைப்
பட்டால்,
உங்கள்
நேரத்தை
ஒதுக்குங்கள்.



> சூஸியின் வெற்றி மந்திரத்தின் தனித்தன்மை என்னவென்றால் இதன் எளிமைதான். பொதுவாகவே வணிகம் மற்றும் மனிதவள மேலாண்மையில் முடிவுகள் எடுப்பது குறித்த உபாயங்களை மிகவும் ரகசியமாகவும் பல்வேறு கட்டங்களாகவும் சொல்லித் தருவார்கள். ஆனால் மிகவும் சிம்பிளாக வெற்றி ரகசியத்தை சொல்லி இருக்கிறார் சூஸி.

என்னவென்றால் இதன் எளிமைதான். பொதுவாகவே வணிகம் மற்றும் மனிதவள மேலாண்மையில் முடிவுகள் எடுப்பது குறித்த உபாயங்களை மிகவும் ரகசியமாகவும் பல்வேறு கட்டங்களாகவும் சொல்லித் தருவார்கள். ஆனால் மிகவும் சிம்பிளாக வெற்றி ரகசியத்தை சொல்லி இருக்கிறார் சூஸி.

முக்கியமான முடிவு எடுக்கவேண்டிய நேரத்தில் மட்டுமின்றி மிகச்சாதாரண நேரங்களிலும் இதனை பயன்படுத்தலாம் என்பதுதான் இந்த மந்திரத்தின் சிறப்பு. வெயிலில் அலைந்துவிட்டு வீட்டுக்கு வருகிறீர்கள். குளிர்சாதனப் பெட்டியில் இருந்து ஜில்லென்று ஐஸ் கட்டி போட்டு பானம் குடிக்க நினைக்கிறீர்கள். அதற்குமுன் 10 - 10 - 10 மந்திரத்தை நினைத்துப் பாருங்கள்.

வெயிலில் அலைந்து வந்ததும் ஜில்லென்று குளிர்பானம் குடித்தால் 10 நிமிடங்களில் தாகம் தீர்ந்துபோகலாம். வெயில் காரணமாக ஏற்பட்டிருக்கும் உடல் எரிச்சலுக்கு இந்தக் குளிர்ச்சி இன்பம் தரலாம். ஆனால், அடுத்த 10 மணி நேரத்தில் என்ன நிகழும்? உடல் சூடாக இருக்கும்போது ஐஸ் கட்டியுடன் பானம் குடித்தால் தொண்டையில் இன்ஃபெக்சன் ஏற்படலாம். சளி பிடிக்கலாம்.

அடுத்தது 10 வருடங்கள். தொண்டையில் ஏற்பட்ட இன்ஃபெக்சன் காரணமாக நுரையீரலில் தொற்று ஏற்பட்டு ஆஸ்துமா, சைனஸ் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இரவில் நிம்மதியாக தூங்க முடியாமல், முழு திறனுடன் வேலை பார்க்க முடியாமல் போகலாம்.

ஒரே ஒரு நாள் ஐஸ் பானம் குடித்தால் இப்படித்தான் நிகழும் என்று அர்த்தம் இல்லை. ஆனால் அடிக்கடி வெயிலுக்குப் போய்வந்ததும் குளிர்பானம் குடித்தால் நிச்சயம் இந்தச் சிக்கல் எதிர்காலத்தில் ஏற்படலாம். அதனால் முதல் முறையே குளிர்பானம் வேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டால், அப்படியொரு பழக்கம் ஏற்படாது.

அதே நேரம் உடலுக்கு நன்மை தருவதாக என்ன குடிக்கலாம் என்பதையும் யோசித்து முடிவெடுக்கலாம். தண்ணீர் அல்லது நீர் மோர் சாப்பிடுவதால் எந்த பக்க விளைவும் ஏற்படாது என்பதால் நிம்மதியாக இருக்கமுடியும்.

ஒவ்வொரு செயலுக்கும் உடனடி பலன், குறுகிய கால பலன், நீண்ட காலப் பலன் நிச்சயம் உண்டு என்பதுதான் சூஸி சொல்லும் மந்திரத்தின் மகிமை. ஒவ்வொரு செயலுக் கும் இந்த மந்திரத்தை பயன்படுத்தத் தொடங்கிவிட்டால், வாழ்க்கையில் வெற்றியை நிச்சயம் ருசிக்க முடியும்.

சின்னச் சின்ன விஷயங்களுக்கும் இந்த மந்திரத்தைப் பொருத்திப்பார்ப்பது வெட்டி வேலையாக ஆரம்பகட்டத்தில் தோன்றலாம். ஆனால் மிகவும் சிம்பிளான செயல்பாட்டுக்கும் இந்த மந்திரத்தால் கிடைக்கும் பலன்களைக் கவனித்தால், இதன் மகிமை புரியும். மேலும் இதனை தொடர்ந்து பயன்படுத்தும்போது, இந்த மந்திரத்தை உபயோகிப்பதும் எளிதாகிப் போய்விடும். ரோட்டுக் கடையில் பஜ்ஜி வாசனை மூக்கைத் துளைக்கும் போதும், மது விருந்துக்கு நண்பர்கள் வற்புறுத்தி அழைக்கும்போதும் இந்த மந்திரத்தின் மகிமையால் எளிதில் தப்பிவிட முடியும்.

ஒரு மாணவர் தன்னுடைய முதல் சிகரெட்டைப் பற்றவைக்கும்போது அல்லது முதன்முறையாக வகுப்பைக் கட் அடிக்கும்போது அவர் 10 - 10 - 10 மந்திரத்தை யோசிப்பவராக இருந்தால், நீண்டகால நோக்கில் தன்னுடைய ஆரோக்கியம், மதிப்பெண்கள், வேலை வாய்ப்பு போன்றவற்றை யோசித்து சிகரெட்டைக் கீழே போடவும், கட் அடிக்காமல் வகுப்பறைக்குச் செல்லவும் வாய்ப்புகள் அதிகம்.

எதிர் வீட்டில் ஒரு பணக்காரப் பெண் உங்களைப் பார்த்து புன்னகை புரிகிறார். பதில் புன்னகை புரிவதற்குள் இந்த மந்திரத்தை மனதில் ஓடவிடுங்கள்.

முதல் பத்து நிமிடங்கள் வானத்தில் பறக்கலாம். அதிர்ஷ்ட தேவதை உங்களை அழைப்பதாக நினைக்கலாம்.

அடுத்த பத்து மணி நேரத்தில் நீங்கள் இருவரும் வெளியே செல்லவேண்டி வரலாம். அவள் பணக்காரப் பெண் என்பதால் நீங்கள் இருப்பதிலேயே சிறந்த உடை அணியவேண்டும். அவரை காஃபி டே போன்ற காஸ்ட்லியான இடத்துக்குத்தான் கூட்டிச்செல்வதற்கு உங்கள் பட்ஜெட் தாக்குப்பிடிக்காமல் போகலாம்.

நீண்டகாலத்தில், திருமணம் ஆகிவிட்டது என்றே வைத்துக்கொள்வோம். அந்தப் பெண் ஆசைப்பட்ட ஒரு வைர மோதிரத்தைக்கூட வாங்கித் தரவில்லை என்று அவர் கோபப்படலாம். அப்பா பணத்தில் நீங்கள் வாழ்வதாக குற்றம் சாட்டலாம். அது உங்கள் மனதை நோகடிக்கலாம்.

ஆகவே, பதில் புன்னகை புரிவதற்குள் இந்த மந்திரத்தை ஒரே ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள். பதில் புன்னகை புரிவதா அல்லது கண்டுகொள்ளாமல் நகர்வதா என்பது புரிந்துவிடும். ஆக, வெற்றி பெற ஆசைப்படும் ஒவ்வொரு நபருக்கும் நல்ல வழிகாட்டி சூஸியின் மந்திரம்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

# உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்..!





எஸ்.கே.முருகன்,
மனவள ஆலோசகர்.

மனிதர்களின் உளவியல் பெரும்பாலும் பொதுவானது. பெரும்பாலான மனிதர்கள் ஒரே மாதிரி சிந்திக்கிறார்கள், ஒரே மாதிரி வருந்துகிறார்கள், ஒரே மாதிரி சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள்.

மனிதர்களின் அன்றாட செயல்பாடுகளிலும், ஆசைகளிலும், எதிர்பார்ப்புகளிலும் பெரிய வித்தியாசம் இருப்பதில்லை. மனிதர்களின் செயல்களை பல்வேறு உளவியல் மருத்துவர்கள் ஆய்வு செய்து, பொதுவான தகவல்களைக் கூறியிருக்கிறார்கள். நீங்களும் இப்படித்தானா என்பதை சோதித்துப் பாருங்கள்.

- நள்ளிரவு அல்லது அதிகாலையில் எதிர்பாராத நபரிடமிருந்து போன் வந்தால், அது கெட்ட செய்தி என்றே நினைக்கிறார்கள்.
- 'அழகாக இருக்கிறீர்கள்', 'இந்த ட்ரெஸ் உங்களுக்கு சிறப்பாக இருக்கிறது', 'உங்களைத் தவிர வேறு யாராலும் இந்த வேலையை சிறப்பாக செய்ய முடியாது' என்று யார் பாராட்டினாலும் அவரை நல்லவர் என்றே நினைக்கிறார்கள்.
- ஹோட்டல், விருந்துகளில் தனக்கு மட்டும் சரியாகப் பரிமாறப்படுவதில்லை என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது.
- தாங்கள் மனதிற்குள் ஒரு முடிவு எடுத்துவிட்டு, அதற்கு ஆதரவு கொடுப்பார் என்று நம்பும் நபரிடம் மட்டுமே ஆலோசனை கேட்கிறார்கள்.
- தங்களுக்கு விருப்பமான நபர்களிடம் மட்டுமே அதிக நேரம் வாதம் புரிகிறார்கள். பிடிக்காத நபர்கள் வாதத்திற்கு அழைத்தாலும் ஆர்வம் காட்டாமல் விலகிவிடுகிறார்கள்.
- புதிய வாட்ச், புடவை, சட்டை அணிந்திருக்கும் நேரத்தில் யாராவது அதை பற்றி கேட்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். கசங்கிய அல்லது கிழிந்த சட்டை அணிந்திருக்கும்போது யார் கண்ணிலும் படக்கூடாது என்று நினைக்கிறார்கள்.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

● மனதுக்குப் பிடித்த நபர்கள் விமர்சனம் செய்யும்போது, திட்டும்போது அதிகம் வருந்துகிறார்கள். பிடிக்காத நபர்கள் விமர்சனத்தை கண்டுகொள்வதில்லை.

● தன்னை விட மற்றவருக்கே ஆடை பொருத்தமாக அமைகிறது, மேக்கப் சிறப்பாக இருக்கிறது என்ற பொறாமை குணம் பெண்களுக்கு இருக்கிறது.

● ஒரு புதிய பொருள் வாங்குவதற்குக் காட்டும் ஆர்வத்தை, அதனை வாங்கிய பிறகு பயன்படுத்து வதற்கு ஆண்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

● சோகத்தில் இருக்கும்போது யார் என்ன கேட்டாலும் உண்மையைப் பேசி விடுகிறார்கள். ஜாலியாக இருக்கும்போது அத்தனை சீக்கிரம் உண்மையைப் பேசுவதில்லை.

● மற்றவர்கள் முன்னிலையில் தன்னை உயர் அதிகாரி, வி.ஐ.பி., பணக்காரர் கவனிக்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு.

● ஒரு பெண் காதலை ஏற்றுக்கொள்ளும் வரை நேரம், பணம் செலவழிக்க ஆண் தயங்குவதில்லை. காதலை பெண் ஏற்றுக்கொண்டதும் தேவை யில்லாமல் ஆண் எதையும் செலவழிப்பதில்லை.

● ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் களின் காதலைப் பெறும் விருப்பம் ஆண்களுக்கு உண்டு.

● காதலிக்கும் வரை அமைதியாக இருக்கும் பெண், காதலிக்கத் தொடங்கிய பிறகு ஆண்களை பேச விடுவதே இல்லை.

● இலவசமாக கொடுக்கப்படும் எல்லா பொருட் களுமே தரம் இல்லாதவை என்றே எண்ணுகிறார்கள்.

● சென்ட் பயன்படுத்தும் நபர்களை அதிக ரசனை உள்ளவர்களாகவும், வாழ்க்கையை அனுபவித்து வாழ்பவர்களாகவும் நினைக்கிறார்கள்.

● பிடித்தவர்களுக்கு வாட்ஸ் ஆப்பில் ஒரு தகவல் அனுப்பிவிட்டு, அதை பார்த்துவிட்டு அவர்கள் விருப்பக் குறியீடு அல்லது பதில் அனுப்பவில்லை என்றால் வருத்தப்படுகிறார்கள்.

● எதிரே இருக்கும் நபர் பேசுவதை சில நிமிடங்களுக்கு மேல் யாரும் உன்னிப்பாகக் கவனிப்பதில்லை, சிந்தனை வேறு எங்கோ போய்விடுகிறது.

● யாராவது ஒருவர் நமக்கு உதவி செய்திருந்தால், நாம் சிறந்த நிலைக்குப் போயிருக்கலாம் என்ற எண்ணம் பெரும்பாலோருக்கு உண்டு.

● என்ன நல்லது செய்தாலும் அது கெட்டதாகவே முடிகிறது என்றே பெரும்பாலோர் நினைக்கிறார்கள்.

● நம்மை யாருமே முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்றே எண்ணமே அனைவருக்கும் இருக்கிறது.



## மந்திரச்சொல்

ஒருவரது
தகுதியை
அவரது
நண்பர்களை
வைத்து
தீர்மானிக்காதீர்கள்,
எதிரிகளைப்
பாருங்கள்.







# கவித்துவம்

இந்த வாழ்க்கை
இந்த வலி
இந்த மகிழ்ச்சி
இந்த சோகம்
இந்த காதல்
இந்த வெற்றி
இந்த தோல்வி
என எதுவுமே
நிரந்தரமில்லை..!
இந்த எல்லா
தருணங்களிலும்
உங்களுக்காக
'நீங்கள்' மட்டுமே
இருக்கக் கூடும்.
அது மட்டுமே நிரந்தரம்!!

– திலகவதி

**சினிமா எனும் வாழ்க்கை**

# ORION AND THE DARK

## இருட்டு எனும் பாசக்காரன்..!



அதிகாலையை ரசிக்கும் மனிதர்கள் நண்பகலை வெறுக்கிறார்கள். மாலையை விரும்பும் மனிதர்கள் இருளை வெறுக்கிறார்கள். சாரல் மழையை விரும்பும் மனிதர்கள் பெரு மழையை வெறுக்கிறார்கள். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை... ஒன்றுக்குள் மற்றொன்று அடங்கியிருக்கிறது என்ற உண்மை பெரியவர்களுக்கே புரியாத போது, குட்டிக் குழந்தைகள் எம்மாத்திரம்..?

குழந்தைகளுக்கு முதல் பயம் தனிமை. அம்மா, அப்பா தன்னை விட்டு போய்விடுவார்களோ என்ற அச்சம் நிறைய குழந்தைகளுக்கு இருக்கிறது. இதையடுத்த அச்சம் என்றால் இருட்டு. ஆம், இரவு நேரமும், இருட்டும் குழந்தைகளை ரொம்பவே பயமுறுத்துகிறது. இந்த பயம் பெரியவர்களுக்கும் இருப்பதால், குழந்தைகளிடம் இருக்கும் இருட்டு அச்சத்தைப் போக்குவதற்கு யாரும் யோசிப்பதில்லை.

இருள் என்பது அச்சம் தருவது அல்ல, அதுவும் பகல் போன்று ஒரு இனிய பொழுது என்பதை குழந்தைகள் அனுபவித்து அறிய வேண்டும் என்பதை ஜாலியாகக் கற்றுக்கொடுக்கிறது, 'ஓரியன் அண்ட் த டார்க்' திரைப்படம்.




11 வயது பள்ளி மாணவன் ஓரியனுக்கு எதைக் கண்டாலும் பயம், எதற்கெடுத்தாலும் பயம். நாய் கடிக்கும் என்று பயம், தேனி கொட்டிவிடும் என்று பயம், தண்ணீரில் மூழ்கிவிடுவோம் என்று பயம். இத்தனை ஏன் செல்போனில் இருந்து வெளியேறும் கதிரியக்கத்தால் மரணம் வரும் என்று பயம், ஓடிக்கொண்டிருக்கும் ஃபேன் கீழே விழுந்து விடும் என்று பயம்.

பள்ளியில் இருக்கும் ஒரு மாணவியை ஓரியனுக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால், அவள் தற்செயலாக ஏறிட்டுப் பார்த்தாலும், அவளை பார்த்து சிரிப்பதற்கு பயம். சக மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு பயம். இத்தனை பயங்களுக்கும் உச்சமாக இருட்டை பார்த்து ரொம்பவே பயம்.

இரவு நேரம், பெற்றோர் கதவை அடைத்துவிட்டுப் போனாலும் திறந்து வைப்பான். லைட்டை அணைத்துவிட்டுப் போனாலும் திரும்பவும் போட்டுக்கொள்வான். இருட்டு அவனை விழுங்கிவிடும் என்ற பயத்துடனே வாழ்கிறான். இருட்டை மோசமானது என்று குற்றம் சாட்டுகிறான். தேவை இல்லாமல் தன் மீது ஓரியன் அதிகப்படியான குற்றச்சாட்டு கூறுவதை பார்த்து நொந்துபோன இருட்டு, நேரடியாக ஓரியனை சந்தித்துப் பேசுவதற்கு வருகிறது. இருட்டு என்பதும் இனிமையானது, அவசியமானது என்பதை புரிய வைக்க முயற்சி செய்கிறது.

ஆனால், இருட்டுடன் பேசுவதற்கே அஞ்சுகிறான் ஓரியன். அவனை சமாதானப்படுத்தி, 'ஒரே ஒரு டிரிப் என்னோடு வா, இரவு எத்தனை அழகு' என்பதைக் காட்டுகிறேன் என்று அழைக்கிறது இருட்டு. தன்னை எப்படியும் இருட்டு விடப்போவதில்லை என்பதால் இருட்டுடன் கிளம்புகிறான்.

இருட்டுக்கு ஐந்து நண்பர்கள் இருக்கிறார்கள். தூக்கம், தூக்கமின்மை, கனவு, நிசப்தம், விசித்திர ஒலி போன்றவற்றை ஓரியனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. இரவு நேரம் மட்டும் ஏன் அமைதியாக இருப்பதற்கு நிசப்தம் எப்படி உதவி செய்கிறது என்றும், ஒருவருக்கு தூக்கம் எப்படி வருகிறது, கனவு எப்படி வருகிறது, இரவு நேரங்களில் விசித்திர ஒலிகள் எப்படி தோன்றுகின்றன், ஒருசிலர் தூக்கம் வராமல் தவிப்பது எப்படி எல்லாம் இருட்டின் நண்பர்கள் நேரடியாக ஓரியனுக்கு செய்து காட்டுகிறார்கள். ஏற்கெனவே பயந்துபோயிருக்கும் ஓரியன், இருட்டையும், அதன் நண்பர்களின் செயல்களையும் பார்த்து மேலும் அச்சப்படுகிறான்.

> பகல் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டுவருகிறது. இருட்டு அச்சத்தையும் அமானுஷ்யத்தையும் தருவதால் மக்கள் உண்மையிலே பகலை மட்டுமே விரும்புகிறார்கள்' என்று அவர்களுக்குக் கூறுகிறான் ஓரியன்.

இருட்டும் அதன் நண்பர்களும் தங்கள் வேலையை சிறப்பாகச் செய்வதாக பெருமையுடன் இருக்கிறார்கள். அவர்களிடம் ஓரியன், 'உங்களை மனிதர்கள் விரும்புவதே இல்லை… வெளிச்சத்தை மட்டுமே மனிதர்கள் விரும்புகிறார்கள்… நீங்கள் மனிதர்களுக்குத் தேவையே இல்லை' என்கிறான்.

'பகலும் வெளிச்சமும் தான் மக்களுக்கு நல்லது செய்கிறது, இருட்டும் அதன் நண்பர்களும் மக்களுக்குத் துன்பத்தைத் தருகிறது என்கிறான். பகல் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டுவருகிறது. இருட்டு அச்சத்தையும் அமானுஷ்யத்தையும் தருவதால் மக்கள் உண்மையிலே பகலை மட்டுமே விரும்புகிறார்கள்' என்று அவர்களுக்குக் கூறுகிறான் ஓரியன்.

தங்களுடைய செயலைப் பார்த்து ஓரியன் அச்சம் நீங்கி ஆச்சர்யப்படுவான் என்று எதிர்பார்த்த இருட்டு ஏமாற்றம் அடைகிறது. ஓரியன் சொல்வது போல் மக்கள் நம்மை வெறுக்கிறார்கள் என்றால் இருட்டுடன் நாம் ஏன் இருக்கவேண்டும் என்று இருட்டின் ஐந்து நண்பர்களும் யோசிக்கிறார்கள். இந்த விஷயம் இருட்டை காயப்படுத்துகிறது.

### மந்திரச்சொல்

வலிமை,
அறிவை
விட
சூழலுக்கேற்ப
மாற்றிக்
கொள்ளும்
தன்மையே
வெற்றி தரும்.




தன்னுடைய நண்பர்களும் வெறுக்கத் தொடங்கியதும் இருட்டு வேதனைப்படு கிறது. இனி, நான் இந்த உலகத்திற்கு வரப்போவதில்லை, நான் காணாமல் போய்விடுகிறேன் என்று சொல்கிறது.

இருட்டு திடீரென காணாமல் போனால் என்ன ஆகும் என்பதை நோக்கி கதை நகர்கிறது. பகல் முழுவதும் வேலை செய்து களைப்பான மக்கள் இரவானதும் ஓய்வு எடுக்க நினைக்கிறார்கள். ஆனால், இருள் வராமல் பகல் தொடர்ந்து நீடிக்கவே அத்தனை மக்களும் எரிச்சல் ஆகிறார் கள். தூக்கம் வராமல் ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்கள். தூங்க முடியாமல், சிந்திக்க முடியாமல், சாப்பிட முடியாமல் மக்கள் அனைவரும் ரொம்பவே தவிக்கிறார்கள்.

மக்களுக்கு இருட்டும் தேவைப்படுகிறது, மக்கள் இருட்டுக்கும் ஆசைப்படுகிறார்கள் என்பதை ஓரியன் புரிந்துகொள்கிறான். இருட்டு இருந்தால் மட்டுமே வெளிச்சத்துக்கு மதிப்பு என்ற உண்மை தெரியவருகிறது. இதையடுத்து இருட்டை மீண்டும் கூட்டிவருவதற்கு முயற்சி எடுக்கிறான்.

ஆனால், நண்பர்களின் முடிவைக் கண்டு வேதனைக்கு ஆளான இருட்டு இந்த உலகத்திற்கு திரும்பிவர விருப்பமில்லாமல் கருந்துளைக்குச் சென்று காணாமல் போக முடிவு செய்கிறது. அந்த கருந்துளைக்குள் இருட்டு போய்விட்டால், அதன் பிறகு இந்த உலகத்திற்கு இரவு நேரத்தில் இருட்டு நிரந்தரமாக வராமல் போய்விடும் என்ற சூழல் நிலவுகிறது.

ஓரியன், ஓரியனின் மகள், அந்த மகளின் குழந்தை என்று நான் லீனியராக காலம் கடந்தும் இருட்டு பற்றிய பயம் நீடிப்பதை விவரித்து, ஓரியனும் ஓரியனின் மகளும் சேர்ந்து இருட்டை எப்படி மீண்டும் பூமிக்கு கொண்டுவருகிறார்கள் என்பதை திரையில் பாருங்கள்.

எந்த விஷயத்தில் புரிதல் இல்லையோ, அது மட்டுமே அச்சம் தரும். எனவே, இருட்டையும் இருட்டில் நடக்கும் செயல்களையும் கொஞ்சம் முயற்சி செய்து புரிந்துகொண்டால் பயப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லை என்பதை குழந்தைகளுக்குப் பிடிக்கும் வகையிலும் புரியும் வகையிலும் விவரிக்கிறது இந்த திரைப்படம்.

இருட்டு பற்றிய பயம் இருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த படம் சிறப்பான பாடம். பகல், இருட்டு எனும் அறிவியல் சமாச்சாரத்தை அட்டகாசமான குழந்தைகள் படமாகக் கொடுத்திருக்கிறார்கள். பெரியவர்களும் இந்த படத்தைப் பார்த்து, குழந்தைகளுக்கு கதையாகச் சொல்லி புரியவைக்க வேண்டும். அப்போது தான், இருட்டை குழந்தைகள் அச்சத்துடன் பார்க்காமல், நட்புடன் நேசிப்பார்கள்.


www.gyaanaguru.com



www.gyaanaguru.com



# மதங்களின் பொய் விளையாட்டு

“புத்த மதம் ஏன் மக்களைக் கவரவில்லை” என்று ஞானகுருவிடம் கேள்வி எழுப்பினார் மகேந்திரன்.

‘‘உண்மையைப் பேசினால் மக்களுக்குப் பிடிக்காது. நிறைய பொய் சொல்ல வேண்டும், நம்ப முடியாத கதைகளைச் சொல்ல வேண்டும், அப்படிப்பட்ட மதங்களையே மக்கள் நம்புவார்கள்.... தலையில் தூக்கிவைத்து கொண்டாடுவார்கள்”

**“ஏன் அப்படி..?”**

‘‘காலம் காலமாக அப்படித்தான் மக்கள் பழகியிருக்கிறார்கள். ஆசைப்படுவது துன்பத்திற்குக் காரணம் என்ற உண்மையைச் சொன்னால் அதை சாதாரணமாக கடந்துவிடுவார்கள். அதையே அடுத்தவர் மனைவி மீது ஆசைப்பட்டால் கடவுள் தேடி வந்து கொன்றுவிடுவார் என்று சொன்னால் மகிழ்ச்சியுடன் கேட்பார்கள். ராமனை போன்று தெய்வம் இல்லை என்று கொண்டாடுவார்கள்.

உன் சிந்தனையே உன் வாழ்வை தீர்மானிக்கும் என்று புத்தர் சொன்ன கருத்தை ஆராய விரும்ப மாட்டார்கள். அதேநேரம், நீ தவறு செய்தால் நரகத்தில் தள்ளப்படுவாய், நல்லது செய்தால் சொர்க்கத்திற்குப் போவாய் என்று சொன்னால் நம்புவார்கள். சொர்க்கம், நரகம் இருக்கிறதா என்ற எதிர்க் கேள்வியும் கேட்க மாட்டார்கள். ஏனென்றால் மக்களுக்குத் தேவை சுவாரஸ்யமான அழகான பொய்கள்...”

**”இவை எல்லாம் மக்களை நல்வழி படுத்துவதற்காக சொல்லப்படுபவை தானே... இதில் என்ன தவறு இருக்கிறது..?”**

‘‘பொய் என்றால் அது பொய் மட்டுமே. உண்மை இல்லாத எல்லாமே தவறு தான். நீ மட்டுமே உனக்கு துணையாக இருக்க முடியும், வேறு யாரும் உன்னை ஆதரிக்க மாட்டார்கள் என்று புத்தர் கூறுவதை நம்ப மாட்டார்கள். பெற்றோருக்கு சோறு போடவில்லை என்றால் அடுத்த ஏழு பிறவிகளில் மிருகமாக, பறவையாகப் பிறப்பாய் என்று சொன்னால் நம்புகிறார்கள்...”

**‘‘ஆனாலும் எல்லோரும் பெற்றோருக்கு சோறு போடுவதில்லையே...”**

‘‘உயிரோடு இருக்கும் போது மதிக்க மாட்டார்கள். ஆனால், அந்த பயம் அவர்கள் அடிமனதில் இருக்கிறது. அதனாலே பெற்றோர் செத்த பிறகு அமாவாசைகளை சிறப்பாக கொண்டாடி படையல் போடுகிறார்கள்... அடுத்த பிறவியில் புழு, பூச்சியாகப் பிறந்துவிடக் கூடாது என்ற பயமே இதற்கு காரணம்......”

**“இந்து மதத்தில் மட்டும் தான் இப்படி பொய் இருக்கிறதா..?”**

‘‘எல்லா மதங்களும் பொய் மட்டுமே பேசுகின்றன. இயேசு வருவார், பாவத்திற்கு சம்பளம் தருவார் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள், அதை நம்பிக்கொண்டே இருக்கிறார்கள். நற்செய்தி என்பது எல்லாமே பொய் செய்திகள் மட்டுமே.

தினமும் ஐந்து வேளை தொழவில்லை என்றால் அல்லாவின் உலகத்தில் இடம் இருக்காது என்று சொல்வதை நம்பி தொழுது கொண்டே இருக்கிறார்கள். மாட்டுக் கறி சாப்பிடலாம் ஆனால், பன்றிக் கறி விலக்கப்பட்டது என்றால் அதையும் அப்படியே நம்புகிறார்கள்.... ஏன், எதற்கு என்றெல்லாம் கேள்வி கேட்பதில்லை. கேள்வி கேட்பதற்கு பிள்ளைகளையும் பழக்குவதில்லை. அதனால் முட்டாள் சமுதாயம் பெருகிக் கொண்டே இருக்கிறது... புத்தர் எந்த ஒரு பொய்யையும் சொல்லவில்லை... அதனால் உண்மையாக மட்டும் இருக்கிறார்...” என்றார் ஞானகுரு.

**மந்திரச்சொல்**

சுதந்திரம் என்பது கொடுக்கப்பட வேண்டியதும் எடுக்கப்பட வேண்டியதும் இல்லை. அது உன்னிடமே உள்ளது.

www.gyaanaguru.com




? ஆத்திகம், நாத்திகம் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

**ஜி.ரத்தினம்மாள், பாண்டியன் நகர்**

**ஞானகுரு :**

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதலே ஆத்திகமும் நாத்திகமும் இருக்கின்றன. தனக்குத் தெரியாததை, தெரியவில்லை என்று சொல்பவன் நாத்திகன். தனக்குத் தெரியாத எல்லாமே கடவுளின் லீலை என்பவன் ஆத்திகன். கடவுள் என்று பெயர் சூட்டியவனும், கடவுளுக்கு உகந்த மந்திரங்களையும், கடவுள் பற்றிய கருத்துக்களையும் உருவாக்கியவர்கள் ஆத்திகர்களே. இயேசுவை ஒரு சாதாரண மனிதனாக கருதுகிறது வரலாறு. நபிகளுக்கு முன்னரே ஏராளமான நபிகள் வந்து போயிருக்கிறார்கள் என்பதால் அவரையும் ஒரு சாதாரண மனிதராகவே சரித்திரம் குறிக்கிறது. ராமனையும் கிருஷ்ணனையும் புராண மாந்தர்களாகவே பார்க்கிறார்கள். ஆத்திகத்தின் பெயரால் ஏராளமான கொலைகளும், போர்களும் இந்த உலகில் நடந்திருக்கின்றன, நடந்துகொண்டிருக்கின்றன, நடக்கவும் போகின்றன. ஆனால், நாத்திகம் ஒருபோதும் எந்த உயிரையும் பறித்ததில்லை.

# ஞானகுரு பதில்கள்



? சுயபுத்தியும், சொல்புத்தியும் வாழ்க்கையை வளமாக்குமா..?

**- எஸ்.கவிதா, புதுவை.**

**ஞானகுரு :**

சுயபுத்தி வேலை செய்யத் தொடங்கி விட்டால், அங்கே சொல் புத்திக்கு அவசியம் இல்லை. தனக்கு சுயபுத்தி இருக்கிறதா என்ற கேள்விக்கு பதில் அறிவதுதான் முதல் தெளிவு.



? நல்ல நேரம், கெட்ட நேரம் எந்த அளவுக்குப் பார்க்கலாம்...?

**S.ராஜ்குமார், திருச்செந்தூர்.**

**ஞானகுரு :**

நல்ல நேரத்தில் மட்டுமே சாப்பிட வேண்டும், ராகு காலத்தில் யாரும் தூங்கவே கூடாது, எம கண்டத்தில் பேசக்கூடாது என்றெல்லாம் கடுமையான கட்டுப்பாடு விதித்திருந்தால், இந்த நேரக் கணக்குகளை மக்கள் எப்போதோ தூக்கி குப்பையில் போட்டிருப்பார்கள். ஆனால், இந்த ஜோதிடக் கணக்குகள் எல்லாமே எதிர்கால அச்சத்தை உருவாக்கி பணம் சம்பாதிப்பதற்காக குறுக்குப்புத்தியுடன் உருவாக்கப்பட்டவை. நல்ல நேரத்திலும் விபத்து, மரணங்கள் நடக்கின்றன. ராகு காலத்திலும் பூக்கள் மலர்கின்றன, அறுவை சிகிச்சைகள் வெற்றி அடைகின்றன. ஆகவே, நாளும் கோளும் நலிந்தவர்களுக்கு மட்டுமல்ல, எந்த ஒரு மனிதருக்கும் தேவையே இல்லை. 24 மணி நேரமும் நல்ல நேரமே.






? அன்பே சிவம் எனும் இந்து மதத்தையும் வன்முறையால் வளர்க்கப்பட்ட இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பது சரியாக இருக்குமா....?

**என்.நாகராஜன், பிள்ளையார்பட்டி.**

**ஞானகுரு :**

அன்பே சிவம் என்பதை சைவ மதக்கோட்பாடு என்று சொல்லலாமே தவிர, அது இந்து மதக் கோட்பாடு அல்ல. அதேநேரம், பிற மதங்களைப் போலவே சைவ மதத்திலும் வன்முறை ரத்தம் நிரம்பி வழிவதற்கு நாயன்மார்களின் வரலாறே சாட்சி. மதுரை கோயிலில் கழுவேற்றம் ஓவியத்தைக் காண முடிகிறது. கூன் பாண்டியன் காலகட்டத்தில் 8,000 சமணர்களை கழுவேற்றம் செய்ததாக சொல்லப்படுவது முழு உண்மையாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றாலும், அப்படியொரு கொடுஞ்செயல் ஓரிரு எண்ணிக்கையில் நடந்தது என்பதை எந்த வரலாற்று ஆய்வாளர்களும் மறுப்பதில்லை. மாற்று மதக்கோட்பாடு உள்ளவர்களுக்கு இத்தனை கொடூர தண்டனை கொடுக்கும் அளவுக்குக் குரூரம் வேறு எந்த மதத்தினரிடமும் இல்லை. அந்த வகையில் சைவ மதம் அன்பின் உச்சம் மட்டுமல்ல, கொடூரத்தின் உச்சமாகவும் இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.





? இளமையில் படிக்கத் தவறுவதும் முதுமையில் படிக்காததற்கு வருந்துவதுமாக மக்கள் இருக்கிறார்களே..?

**பி. கந்தசாமி, சேலையூர்.**

**ஞானகுரு :**

பள்ளி வயதில் பாடப்புத்தகங்களின் அழுத்தமில்லாமல் சந்தோஷமாக சுற்றித் திரிவதற்கு ஆசைப்படுவது குழந்தைகளின் இயல்பு. வாழ்க்கையின் அழுத்தமும் தீவிரமும், படிப்பின் முக்கியத்துவமும் அந்த வயதில் புரிவதில்லை. அதனாலே பெரும்பாலோர் கடமைக்காக படித்து முடிக்கிறார்கள். ஆனால், இப்படி படிப்பதும், படிக்காமல் போவதும் ஒரு பிரச்னையே இல்லை. ஆனால், படிப்பின் மூலம் சிலர் ஜெயித்ததைக் கண்டு பொறாமையும் ஏக்கமும் கொள்பவர்களே, சின்ன வயதில் படிக்காமல் போனதற்கு வருந்துகிறார்கள். உண்மையில் படிப்புக்கும் வெற்றிக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஏனென்றால் நிறைய படித்த எல்லோருமே அடிமை வேலைக்கே ஆசைப்படுகிறார்கள். படிப்பைத் தாண்டி சிந்திப்பவர்களே வியாபாரிகளாக, தொழிலதிபர்களாகவும் மிகப்பெரும் சாதனையாளர்களாக மலர்கிறார்கள். எதுவாயினும் முடிந்துபோன விஷயத்துக்காக வருத்தப்படுவது வறட்டு சிந்தனை.



? பி.எஸ்.என்.எல். ஊழியர்கள், ரயில்வே ஊழியர்கள், அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது கோபம் கோபமாக வருகிறது... இத்தனை சம்பளம் வாங்கிக்கொண்டு, ஒழுங்காக வேலை செய்யாமல் மக்களை அலைக்கழிக்கும் இவர்களை ஒழித்துக்கட்டிவிட்டு தனியார் வசம் கொடுப்பது நியாயம்தானே....?

**எஸ்.ராஜாக்கனி, விருத்தாசலம்.**

**ஞானகுரு :**

இப்படி பொதுஜனம் நினைக்க வேண்டும் என்றே கார்ப்பரேட் அரசு கணக்கு போடுகிறது. பொதுத்துறை நிறுவன பணியாளர்கள் எண்ணிக்கையைக் குறைக்கிறது, வளர்ச்சிக்கு நிதியைக் குறைக்கிறது, டெக்னாலஜியை தவிர்க்கிறது. இதன் காரணமாக அவர்களுடைய செயல் திறன் தனியாருடன் போட்டியிட முடியாத அளவுக்குக் குறைகிறது. அங்கே போனால் வேலை அத்தனை சீக்கிரம் நடக்காது. மக்களுக்குக் கோபம் வருகிறது. இந்த நிலையில் தங்களுக்கும் நிறுவனத்துக்கும் தேவையான வசதிகளுக்காக போராட்டம் நடத்துவதைக் காணும் மக்களுக்கு எரிச்சல் வருகிறது. பொதுத் துறையை விட தனியாரே மேல் என்று ஒவ்வொருவரும் குமுறத் தொடங்கும் நேரத்தில், அத்தனை நிறுவனங்களையும் தாரை வார்த்துவிடுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை - மதுரை விமானக் கட்டணம் எப்படி இருந்தது இப்போது எப்படி இருக்கிறது என்பதை மட்டும் ஒப்பிட்டுப் பாருங்கள். போராட்டங்களின் பின்னணி புரிந்துவிடும்.

ஞானகுரு மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 3 - 4

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com

**? என் கணவர் இறந்த துயரத்திலிருந்து என்னால் இன்னமும் மீள முடியவில்லை... என்ன செய்வது..?**

**சி.ரோகிணி ரத்தினம், தஞ்சாவூர்.**

**ஞானகுரு :**

காலம் ஒரு மகத்தான மருத்துவன். எப்படிப்பட்ட துயரங்களையும் அது ஆற்றிவிடும். ஆனால் வேண்டுமென்றே சிலர், துயரங்களில் இருந்து உடனடியாக வெளி வர விரும்புவதில்லை. ஏனென்றால், அவர்களுக்கு இறந்த நபரை நினைத்து நினைத்து வேதனைப்படுவதில் உள்ளூர கொஞ்சம் சந்தோஷம் கிடைக்கிறது. மேலும், உடனடியாக செய்தே தீரவேண்டும் என்பது போன்று எந்த அவசர வேலையும் காத்திருக்கவில்லை என்பதால், இறப்பின் துயரத்தைப் பிடித்துக்கொண்டே நிற்பார்கள்.

எத்தனை துயரத்தில் எவர் இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் வயிறு பசிக்கும், தண்ணீர் தவிக்கும், உடல் உபாதைகள் வெளியேறும், தூக்கம் வந்தேவிடும். இதெல்லாம் மனித இயல்பு தான். துக்கத்தை மட்டுமல்ல மகிழ்ச்சியையும் உடல் நீண்ட நேரம் தாங்கிக்கொண்டு நிற்பதில்லை. எனவே, யதார்த்தம் புரிந்து அடுத்ததில் கவனம் செலுத்துவதே வாழ்வு. எல்லா மனிதரும் வாழப் பிறந்தவரே தவிர, பிறரை எண்ணி வேதனைப்படுவதற்கு அல்ல. எனவே, இனி யாரையும் அதிகம் நேசிக்க வேண்டாம், எதையும் ஆழமாக யோசிக்க வேண்டாம். அதிகம் நேசிப்பதே அதிக துன்பத்திற்குக் காரணம் என்பதை புரிந்துகொண்டால், அழுகையை நிறுத்திவிடலாம்.



**? காரியம் ஆகுறதுக்கு கழுதை காலில் கூட விழலாம் என்பது சரிதானே..?**

**ஆர்.பால்பாண்டி, மதுரை**

**ஞானகுரு :**

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் கலாச்சாரத்தின் மிச்சசொச்சமே காலில் விழுதலும், விழ வைத்தலும். காலில் விழுந்து காரியம் சாதித்துக்கொள்வதை ஒரு கலையாக பலர் பாவிக்கிறார்கள். காலில் விழுபவர்களும், விழ வைப்பவர்களும் உலக மகா நடிகர்கள். மூத்தவர்கள் காலில் விழுவது ஆசிர்வாதம் என்பதும் மூட நம்பிக்கையே. எந்த ஒரு நபரின் ஆசிர்வாதமும் எவரையும் வாழ வைத்ததில்லை. அதேபோல் எந்த ஒரு நபரின் வயிற்றெரிச்சலால் எவரும் வீழ்வதும் இல்லை.



**? சிரிப்பை மறந்து வாழ்பவர்கள் மனநோயாளிகளா?**

**டி.முத்துராஜ், வெற்றிலையூரணி**

**ஞானகுரு :**

வேலை நேரத்தில் சிரிக்கக்கூடாது, படிக்கும்போது சிரிக்கக்கூடாது, வாய்விட்டு சிரிக்கக்கூடாது, கூட்டத்தில் சிரிக்கக்கூடாது, சிரிக்கும்போது சத்தம் வரக்கூடாது, இரவில் சிரிக்கக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு விதிப்பவர்களே மன நோயாளிகள். வாழ்க்கையின் நுட்பம் அறிந்தவர்கள் ஒருபோதும் சிரிப்புக்கு கட்டுப்பாடு விதிக்க மாட்டார்கள். சிரிப்புதான் மனிதர்களின் மாமருந்து. சிரிப்பு எளிதாக பிறரிடம் தொற்றிக்கொள்ளும். ஆகவே, சிரிக்க மறக்காதீர்கள்.



**? வெளிநாடுகளுக்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு இங்கு பெற்றோர்கள் தனிமரமாய் தவிக்கிறார்களே...?**

**செல்வரதி - சுந்தரராஜ், தர்மபுரி.**

**ஞானகுரு :**

எந்த இடத்தில் வாழ்வது மகிழ்ச்சி தரும் என்று நினைக்கிறார்களோ, அங்கே வாழ்வதே சரியான வழி. ஆனால், வெளிநாட்டிற்குச் சென்றால் நிறைய பணம் சேமித்துவிடலாம் என்ற நப்பாசையிலே நிறைய பேர் வெளிநாடு செல்கிறார்கள். பெருமைக்காக பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். பணத்தினால் மட்டும் வாழ்க்கை ஒருபோதும் சிறப்படைவ தில்லை. வெளிநாட்டில் சம்பாதித்து திரும்பிவந்த நிறைய பேர் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்திருக் கிறார்கள். பிள்ளைகள் தங்களுக்கு அருகில் இருக்க வேண்டும் என்று பெற்றோர் நினைப்பதே பிசகு. எல்லோரும் தனியாகப் பிறந்து, தனியாகத்தான் போய்ச் சேர வேண்டும். எனவே, தனி மரமாய் வாழப் பழகுவதே சரியான வாழ்வு.

**? வேதனைகளும் சோதனைகளும் இல்லாத வாழ்வு எப்படியிருக்கும்..?**

**- பி.தண்டாயுதபாணி, கோவை**

**ஞானகுரு :**

வாலை இழந்த பல்லி வழக்கம்போல் துள்ளியோடு கிறது. விபத்தில் ஒரு காலை பறிகொடுத்த நாய், மூன்று கால்களுடன் நான்காவது காலை இழுத்துக்கொண்டே நடமாடுகிறது. முட்டைகள் திருடப்பட்டது அறிந்த பறவை, அடை காப்பதை விடுத்து இயல்பு வாழ்வுக்குத் திரும்புகிறது. மனிதனைத் தவிர அத்தனை உயிர்களும் வேதனைகளை யும், சோதனைகளையும் வாழ்வின் இன்னொரு பகுதியாக மட்டும் பார்க்கின்றன. எனவே விரைவில் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிவிடுகின்றன. ஆனால், மனிதன் மட்டுமே அதிர்ந்து போய் அதே இடத்தில் நிற்கிறான். இன்பங்களைப் போன்று பிரச்னைகளையும் ஏற்றுக்கொண்டு வாழ்வதே நல் வாழ்வு. வேதனைகள் இல்லையென்றால் அங்கே இன்பத்தின் சுவை தெரியாமல் போய்விடும்.

**? ரோல் மாடலாக ஒருவரை நம் வாழ்வில் பின்பற்றலாமா..?**

**ஏ.மாரிக்கனி, ராஜபாளையம்**


**ஞானகுரு :**

மகாத்மா காந்தி சிறுவனாக இருந்த காலத்தில் அரிச்சந்திர மகாராஜாவின் கதையைக் கேட்டு, உண்மை பேசுவதை தன்னுடைய வாழ்நாள் லட்சியமாக எடுத்துக்கொண்டார். தென்னாப்பிரிக்கா சென்ற நேரத்தில் லியோ டால்ஸ்டாயின் புத்தகங்களைப் படித்து அமைதிவழிப் போராட்டம் பற்றி அறிந்துகொண்டார். அரிச்சந்திரனும் லியோ டால்ஸ்டாயும்தான் காந்தியின் மனதில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தவர்கள். ஆனால், இருவரையும் அப்படியே தன்னுடைய வாழ்க்கையில் காந்தி பின்பற்றவில்லை. இருவரது கருத்துக்களையும் ஒன்றிணைத்து அமைதிவழிப் போராட்டம் என்று புதிய அஹிம்சை போராட்டத்தை உருவாக்கினார். அமைதியைவிட உண்மையை அதிகம் நம்பினார். உண்மையே ஆயுதமாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். உண்மையுடன் இருப்பவர்களுக்கு ஆயுதம் அவசியமில்லை என்றுதான் சத்தியாகிரக போராட்டத்தை வடிவமைத்தார். தனக்கென்று ஒரு புதிய வழியை உருவாக்கியதாலே இன்று மகாத்மாவாக கொண்டாடப்படு கிறார். எனவே, எத்தனை பேரை வேண்டுமானாலும் மனிதர்கள் ரோல்மாடலாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், யாரையும் பின்பற்றத் தேவையில்லை. ரோல்மாடல்களிட மிருந்து தங்களுக்குத் தேவையான பண்புகளை மட்டும் பெற்றுக்கொள்வதே போதும். அதுவே, தன்னம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரக்கூடியது.







www.gyaanaguru.com























# விருப்ப சந்தா 500 ரூபாய் செலுத்துங்கள்







மனிதருக்கு ஆரோக்கியமான உடல், அமைதியான மனம், போதுமான பணம், நிறைய அன்பு, மகிழ்ச்சி தேவைப்படுகிறது. இவற்றை அடைவதற்கு லாப நோக்கமின்றி வழி காட்டுவதே ஞானகுரு மகிழ்ச்சி இதழின் நோக்கம். இந்த இதழுக்கு விருப்ப சந்தா 500 ரூபாய் கட்டுங்கள். ஞானகுரு பதிப்பகத்தின் முந்திய இதழ்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

**GPAY : +91 72997 53999**

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

# ஜக்கி வாசுதேவ் கடவுளை ஏன் நம்புவதில்லை..?!



ஆழ்மனமே தாழ் திறவாய்!

## அத்தியாயம்-28

மனிதர்களின் மனதை மாற்றுவதற்கு பொழுது போக்கு சாதனங்களே போதுமானதாக இருக்கிறது. தனி மனிதனின் மனதை மாற்றுவது போலவே, ஒரு குடும்பத்தை, ஒரு பெரும் கும்பலின் மனநிலையை மிக எளிதாக மாற்றிவிடுகிறார்கள்.

சில நிமிடங்கள் வாட்ஸ் ஆப் அல்லது இன்ஸ்டாகிராம் வேலை செய்யவில்லை என்றால், அந்த நிமிடங்களில் மனிதர்கள் பெரும் பதட்டம் அடைந்துவிடுகிறார்கள். செல்போனை அணைத்து மீண்டும் மீண்டும் இயக்கிப் பார்க்கிறார்கள். தங்கள் நண்பர்களுக்கு எல்லாம் போன் செய்து கேட்கிறார்கள். ஒரு புதையல் கைவிட்டுப் போனது போன்று தடுமாறும் அளவுக்கு மனிதர்கள் இப்போது டிஜிட்டல் அடிமைகளாக இருக்கிறார்கள். அதனாலே டிஜிட்டல் அவர்களை ஆட்சி செய்கிறது.

இப்போது இந்தியாவில் வாட்ஸ் ஆப் 80 கோடி பேரும் இன்ஸ்டாகிராமை 50 கோடி பேரும் பயன்படுத்துகிறார்கள். இதே போன்று நிறைய பேர் பயன்படுத்தும் டிவிட்டர், ரீல்ஸ், ஷார்ட்ஸ் போன்ற பல்வேறு சமூக ஊடகங்கள் மூலம் டிஜிட்டல் தொழில் நுட்பத் தாக்குதல் உச்சக்கட்டத்தில் நடந்து வருகிறது.

பொழுதுபோக்கு என்ற போர்வையில் பொய்யை உண்மை போன்று தைரியமாக உரத்துச் சொல்கிறார்கள். ஒரே பொய்யை பல பேர் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். நிறைய பேர் சொல்வதால், அதனை உண்மை என்று மக்கள் நம்பத் தொடங்குகிறார்கள். இப்படி பொய் சொல்லி நம்ப வைக்கப்படும் பதஞ்சலி, ஈஷா ஆகிய இரண்டு ஆன்மிக வியாபாரத்தை மட்டும் இங்கு பார்க்கலாம்.

குறுகிய காலத்தில் பதஞ்சலி பொருட்களுக்கு இந்தியா முழுக்க வரவேற்பு கிடைத்தது. எப்படியென்றால் பாபா ராம்தேவை நிறைய அரசியல்வாதிகளும், சினிமா கலைஞர்களும் சுற்றிநின்று பாராட்டினார்கள். அதாவது அவர்களே பாராட்டுவதற்கு ஆட்களைப் பிடித்து, அதை பிரபலப்படுத்தினார்கள். இதையடுத்து நாடு முழுவதும், ஒவ்வோர் ஊரிலும் பதஞ்சலி பொருட்களுக்கு என பிரத்யேக கடை திறக்கப்பட்டன. பற்பசை தொடங்கி பல்வேறு ஆயுர்வேத சூரணங்கள் வரை நூற்றுக்கணக்கான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

மனிதருக்கு வரும் அத்தனை நோய்களுக்கும் பதஞ்சலியின் ஆயுர்வேதப் பொருட்களில் நிவாரணம் இருக்கிறது என்று அழுத்தம்திருத்தமாக விளம்பரம் செய்தார்கள். மேலும் பதஞ்சலி பொருட்கள் எல்லாமே ஆர்கானிக் என்று விளம்பரங்களில் கூறியதை நம்பி வீட்டின் அத்தியாவசியப் பட்டியலில் பதஞ்சலியை சேர்த்துக்கொண்டார்கள். பதஞ்சலியில் தேன் வாங்கினால் அது ஒரிஜினல் தேன் என்று அவர்களாகவே நம்பிக் கொண்டார்கள்.

பதஞ்சலி பொருட்களும் அதன் விளம்பரமும் சீட்டிங் என்று சிலர் தடை கேட்டு நீதிமன்றம் போனார்கள். நீதிமன்றமும் அதனை ஆய்வு செய்தது. இப்படி மருந்துகள் குறித்து தவறான தகவல் தெரிவித்தால் 1 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை செய்தது. உடனே பதஞ்சலி நிறுவனம் மன்னிப்பு கேட்டுக்கொண்டதே தவிர, நோயை தீர்க்கும் தன்மை தங்கள் பொருட்களில் உள்ளன என்று நீதிமன்றத்திடம் சொல்லவில்லை.

இப்படி, பதஞ்சலி விளம்பரத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதும், அது நீதிமன்றத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டதும் நிறைய மக்களுக்குத் தெரியவே தெரியாது. ஏனென்றால், பதஞ்சலி பொருள் விற்பனையாளர்கள் இதுகுறித்து பேசவே மாட்டார்கள். அதனால், இப்போதும் அந்த பொருட்கள் சர்வரோக நிவாரணி என்ற எண்ணத்தில் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். இன்னமும் விற்பனை ஜோராக நடக்கிறது.

யோகாவிலும் ஆயுர்வேத பொருட்களிலும் அத்தனை நோய்களுக்கும் மருந்து இருக்கிறது என்று சொன்ன பாபா ராவ்தேவ், அவருக்கு உடலில் பிரச்னை என்றதும் வெளிநாட்டில் இருக்கும் அலோபதி மருத்துவமனைக்குத்தான் போனார். எந்த பதஞ்சலி பொருட்களையும் அவர் பயன்படுத்தவில்லை. ஏனென்றால், அவை எல்லாமே போலி என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

ஆயுர்வேதம் பற்றி எந்த அடிப்படை அறிவும் படிப்பும் இல்லாத ராம்தேவ் பதஞ்சலி என்று ஒரு நிறுவனத்தை உருவாக்கி கொள்ளை அடிப்பது போலவே யோகா குரு என்று சொல்லிக்கொண்டு ஈஷா மையம் மூலம் ஜக்கி வாசுதேவும் கொள்ளை அடித்துவருகிறார்.


# ஜக்கி வாசுதேவ் கடவுளை ஏன் நம்புவதில்லை..?!

யோகா மற்றும் குண்டலினி சக்தியை உயர்த்துவதன் மூலம் உடலுக்கு வரும் எந்த நோயையும் குணப்படுத்திவிடலாம் என்று ஈஷோ யோகா மையத்தில் கற்றுத் தருகிறார். அலோபதி மருந்துகள் எல்லாமே கெமிக்கல். எனவே, அதனை தள்ளிவைக்க வேண்டும் என்கிறார் ஜக்கி.

சமீபத்தில் அவருக்கு தலையில் ஒரு நோய் வந்தது. உடனே நாட்டிலேயே மிக உயர்ந்த மருத்துவக் கட்டமைப்பு கொண்ட அப்பல்லோ மருத்துவமனையில் சேர்ந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டார். தனக்கு ஒரு பிரச்னை வந்த நேரத்தில் ஜக்கி வாசுதேவ் யோகாவையோ, குண்டலினி சக்தியையோ ஏன், அவர் கடவுளையும் நம்பவில்லை? உண்மையில் யோகா மீது ஜக்கிக்கு முழு நம்பிக்கை இருக்கும் என்றால் குண்டலினி சக்தியை எழுப்ப முடியும் என்றால் கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர் என்றால், நிச்சயம் அப்பல்லோ மருத்துவமனைக்குப் போயிருக்க மாட்டார்.

ஆனால், அவர் சொல்வது எல்லாம் பொய் என்று அவருக்குத் தெரியும். மேலும், கடவுளை ஒருபோதும் அவர் நம்புவதும் இல்லை. யோகா, குண்டலினி சக்தி, ஆதியோகி சிவன் எல்லாமே அடுத்தவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து பணம் சம்பாதிக்கும் வழி. அரசியல்வாதிகளை ஏமாற்றுவதற்கும் சினிமா கலைஞர்களை வசப்படுத்து வதற்கும் இந்த சூத்திரம் சிறப்பாக செயல்படுகிறது.

சிம்பிளாக திருமணம் முடியுங்கள் என்று பிறருக்கு அறிவுரை சொல்லும் சத்குரு, தன்னுடைய மகளுக்கு சீரும் சிறப்புமாக திருமணம் செய்வார். எனக்கு பெரிய மனிதர்கள் கொடுக்கும் பணம் மட்டும் போதும் என்று சொல்லும் அதே வேளை, தன்னுடைய அடித்தட்டு நடுத்தர வர்க்க சீடர்களிடம் அன்பளிப்புப் புத்தகம் வழங்கி, எத்தனை ரூபாய் கிடைத்தாலும் கொண்டுவந்து தாருங்கள் என்று வேண்டுகோள் வைப்பார்.



தன்னுடைய சீடர்களுக்கு அமாவாசை தோறும் மொட்டை அடுத்துக்கொண்டால் தான் ஆத்மாவும் சீரமும் தூய்மையாகும் என்று பாடம் சொல்லித்தரும் சத்குரு, ஒருபோதும் மொட்டை அடித்துக்கொள்ள மாட்டார். ஏனென்றால், அவருடைய பிராண்ட் தாடியும் தலைமுடியும் தான். அவை இல்லையென்றால், அவர் இமேஜ் உடைந்துவிடும்.

ஜக்கி அலோபதி சிகிச்சை எடுத்துக் கொண்டதை மக்கள் கேள்வி எழுப்பிவிடக் கூடாது என்பதற்காக அவரே ஒரு வீடியோ வெளியிடுகிறார். அதாவது, 'என்னுடைய தலையை மருத்துவர்கள் திறந்து பார்த்தார்கள், உள்ளே ஒன்றும் இல்லை என்று சொல்லி மூடிவிட்டார்கள்' என்று சிரிக்கிறார். இத்தனை பெரிய அறுவை சிகிச்சைக்குப் பிறகும் ஜாலியாக ஜக்கி சிரிக்கிறார் பாருங்கள் என்று அவரது சீடர்கள் பிரமிக்கிறார்கள்.

இப்படி பிரமிக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு கேலியாக ஒரு வீடியோ வெளியிடுகிறார். அதாவது விஷயத்தை திசை திருப்புகிறார். ஏன் காட்டை அழித்து ஆசிரமம் அமைத்தீர்கள் என்று கேள்வி கேட்டால், நான் எத்தனை லட்சம் மரங்கள் நட்டிருக்கிறேன் என்பது தெரியுமா என்று வேறு ஒரு கேள்வியை எழுப்பி, கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மாட்டார்.

ஜக்கி என்ன செய்தாலும் அது சரி என்றே அவரது சீடர்கள் ஏற்றுக்கொள்வார்கள், மற்றவர்களையும் நம்ப வைப்பார்கள். அவர் காலில் ஷூ போட்டுக்கொண்டு ஆதியோகி சிலையின் முன்பு நடனம் ஆடுவார். ஆனால், மற்றவர்கள் ஷூ போட்டுக்கொண்டு ஆதியோகியை தொட்டுவிட முடியாது. அவர் பாம்புகளை பிடித்து விளையாடுவார். ஆனால், ஒரு சாதாரண மனிதன் வயிற்றுப் பிழைப்புக்காக பாம்பு வைத்து வித்தை காட்டுவதற்கு காட்டிலாக்காவும், காவல் துறையும் அனுமதி கொடுக்காது.

ஜக்கி தனித்தன்மை வாய்ந்தவர் என்பதால் அவருக்கு உடல் சரியில்லை என்றால் அலோபதி சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம் என்று அவரது சீடர்களே நம்புகிறார்களே தவிர, ஏன் குண்டலினி சக்தி மூலம் இதை தீர்க்க முடியாது என்று கேள்வி எழுப்புவதில்லை.

ஆன்மிகத்தில் மட்டுமில்லை, ஒவ்வொரு விளம்பரங் களிலும் பொய் கொட்டிக் கிடக்கிறது. காம்ப்ளான், பிடியோசூர் குடித்தால் பிள்ளைகள் உயரமாக வளர்ந்துவிடுவார்கள் என்று காட்டப்படுவதை நம்பி எத்தனையோ பேர் வாங்கி பயன்படுத்துகிறார்கள். யாரும் வளர்வதில்லை, ஆனாலும் கேள்வி எழுப்புவதில்லை.

தஞ்சை பெரிய கோயில் உச்சியில் பிரமந்திரக்கல் எனப்படும் விமானம் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளது என்று பிரமிக்கிறார்கள். அதனை ஒரு சாதனையாக காலம் காலமாக சொல்லிவருகிறார்கள். ஆனால், அந்த விமானம் ஒரே கல்லால் ஆனது அல்ல என்று ஆய்வாளர்கள் நிறைய முறை கூறியும் அது மக்களிடம் போய் சேரவில்லை. அங்கிருக்கும் நந்தி வளர்ந்து கொண்டே வருகிறது, தஞ்சை பெரிய கோயில் நிழல் தரையில் விழாது என்றெல்லாம் கட்டுக்கதைகள் உலவி வருகிறது. அறிவியல் அறிவும் தொழில்நுட்பமும் பெருகியிருக்கும் இந்த காலத்திலும் தைரியமாக இப்படி பொய் சொல்லப்படுகிறது என்பது தான் ஆச்சர்யம்.


இப்படி கண் முன் கொட்டப்படும் செய்திகள், கருத்துக்களில் இருக்கும் உண்மைத்தன்மையை எப்படி அறிந்துகொள்வது... அறிந்துகொள்வது சாத்தியமா என்று யோசிக்கிறீர்களா..?

நிச்சயம் சாத்தியமே. ஆனால், கண்ணால் காணும், காதால் கேட்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பகுத்தறியும் தெளிவான மனம் அமைய வேண்டும். அப்படி தெளிவான மனம் கிடைக்க வேண்டும் என்றால், அந்த மனம் உங்கள் சொல்படி கேட்கும் நண்பனாக இருக்க வேண்டும். மனதுடன் நட்பு கொள்ள முடியுமா..? மனதை நண்பனாக்குவது எப்படி..?

**அடுத்து பார்க்கலாம்,.**








Click the book to read the magazine

மகிழ்ச்சிக்கு மொழி ஒரு தடையில்லை.
புதிய முயற்சியாக ஆங்கிலத்திலும் மலர்கிறது
ஞானகுரு மகிழ்ச்சி. எளிய மொழியில்
எல்லோருக்கும் கிடைக்கட்டும் மகிழ்ச்சி.

happiness only real when shared

# ஆன்லைன் கவுன்சிலிங்

**திருமணத்துக்கு முன் / பின் குழப்பங்கள், காதல் பிரச்னைகள், குழந்தை வளர்ப்பு தடுமாற்றங்கள், முடிவு எடுப்பதில் சிரமம் போன்ற மன நல சிக்கல்களை மனம்விட்டுப் பேசுங்கள்...**




மனவள ஆலோசகர் **எஸ்.கே.முருகன்**
**ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.**
முன்பதிவுக்கு : +91 80725 89355